# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).**

************

மனு எண் : 0381 / 2017 / ஊராட்சி

ஆணை எண் : 056 / 2017

நாள் : 27.03.2017

எம். ஹபீப் முகமது,
5/79,V.P.நகர், பண்டாரவாடை,
தஞ்சாவூர் மாவட்டம். – மனுதாரர்

ஊராட்சி செயலாளர்,
மாரியம்மன் கோவில் ஊராட்சி,
தஞ்சாவூர் ஒன்றியம். – எதிர் மனுதாரர்

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மாரியம்மன் கோவில் ஊராட்சியில் வசிக்கும் திரு.எம்.ஹபீப் முகமது என்பவர், அவருடைய 15.03.2017 நாளிட்ட மனுவில் அவருக்கு சொந்தமான இடத்திற்கு உண்டான சொத்து வரி மற்றும் குடிநீர் வரி போன்ற வரி இனங்களை முறையான ஊராட்சி பதிவு எண், கதவு எண், புல எண் கண்டு 16/17 க்கு விதிக்குமாறும், ஏற்கனவே தவறாக விதிக்கப்பட்ட 4 இனங்களுக்கான வரியை நீக்கி நிவாரணம் வழங்குமாறும் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு"என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்
திரு.எம்.ஹபீப் முகமது,
த/பெ.மைதீன் பாச்சா,
5/79,V.P.நகர், பண்டாரவாடை,
தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர் மாவட்டம்,
தஞ்சாவூர்.

உதிரி -5.